## இன்சொல் பேசு

கொஞ்சம் பேசு...குழந்தைக்குப் பால்போல்

பந்திக்குப் பழம்போல் பேசு....,

இதமாய் இலகாய் கொஞ்சம்,

இதயம் குளிரக் குணமாய் பேசு..

வறண்ட நெஞ்சம் வாழ்க்கைத் துளிர

மழையாய் பேசு.. மழலையாய் பேசு...

அந்திப் பொழுதில் மின்மினியாய்

நிலவின் மறைவில் நட்சத்திரமாய் பேசு...

குழலின் இசையாய் பேசு

பூவின் மணமாய் பேசு.

இனிதாய் உயர்வாய்

பணிவாய் பனிபோல் பேசு...

உள்ளத்தினின்று உண்மை பேசு..

கள்ளம் தவிர்த்து கனிவாய் பேசு..

வறண்ட மண்ணுக்கு மழை விருந்து..

வலிபட்ட நெஞ்சுக்குச் சொல் மருந்து.

தேனாய் கொஞ்சம் தென்றலாய்

சொல்லச் சொல்வோம்

சொல்லிச் செல்வோம்

இன்சொல்லை..


குணசேகரன

21BT01